**மழைநீரை சேமிப்போம் !** **பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம் !!**

நகராட்சி அலுவலகம்,
தேனி-அல்லிநகரம்.

நாள். 12.01.2018

## நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2048 தை மாதம் 28ஆம் நாள் **12.01.2018 வெள்ளிக்கிழமை** காலை 10.35 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற **அவசரக் கூட்டம்** நடைபெறும்.

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி

## பொருள் 01:

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான அல்லிநகரம் பகுதியிலுள்ள நகராட்சி தொடக்கப்பள்ளியில் மாணவர்கள் நவீன முறையில் கல்வி கற்கும் வகையில் "Smart Class" அமைக்கும் பொருட்டு, அதற்கான வகுப்பறையில் பராமரிப்பு பணிகளான False Ceiling, Painting, Light arrangements மற்றும் Furnitures ஆகிய பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:9.90 லட்சம் (ரூபாய்: ஒன்பது லட்சத்து தொன்னூறு ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ: (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி - அல்லிநகரம் நகராட்சி அல்லிகரம் நகராட்சி தொடக்கப் பள்ளியில் "Smart Class" அமைக்கும் பொருட்டு False Ceiling, Painting, Light arrangements மற்றும் Furnitures ஆகிய பணிகள் மேற்கொள்ளுதல் | 9.90 |

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) உடனடியாக பணி மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4256/2017/இ1)

**தீர்மான எண். 399 அ, ஆ மற்றும் இ. அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் 02</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான அல்லிநகரம் பகுதியிலுள்ள நகராட்சி தொடக்கப்பள்ளியில் மாணவர்கள் நவீன முறையில் கல்வி கற்கும் வகையில் “Smart Class” அமைத்து தர கோரி உதவி தொடக்க கல்வி அலுவலர், தேனி மற்றும் தலைமை ஆசிரியர் நகராட்சி தொடக்கப்பள்ளி அல்லிநகரம் ஆகியோரிடமிருந்து வரப்பெற்ற கடிதத்தின்பேரில், மேற்கண்ட பள்ளியில் பயிலும் மாணவர்களின் அறிவு திறனை ஊக்குவிக்கும் வகையில் “Smart Class” அமைப்பதற்கும் அதற்கான Software மற்றும் இதர அமைப்புகளுக்கான உபகரணங்கள் பொருத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:4.60 லட்சம் (ரூபாய்: நான்கு லட்சத்து அறுபது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ: (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி - அல்லிநகரம் நகராட்சி அல்லிகரம் நகராட்சி தொடக்கப் பள்ளியில் “Smart Class” அமைத்தல் | 4.60 |

**<u>அலுவலக குறிப்பு</u> :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) உடனடியாக பணி மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4257/2017/இ1)

**<u>தீர்மான எண். 400 அ, ஆ மற்றும் இ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 03</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் ரூ:42.09 கோடி மதிப்பீட்டில் பாதளா சாக்கடை திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டது. பாதாள சாக்கடை திட்டப் பணி முடிவுற்று கீழ்கண்டவாறு கழிவுநீர் உந்து நிலையம் மற்றும் கழிவுநீர் உந்து ஆய்வு தொட்டி நகராட்சியின் பராமரிப்பிற்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண்: | அமைவிடம் | விபரம் |
|---|---|---|
| 1 | வார்டு எண்:02 பெருமாள் தெரு | கழிவுநீர் உந்து ஆய்வு தொட்டி |
| 2 | வார்டு எண்:24 அன்னப்பராஜா மண்டபம் தெரு | கழிவுநீர் உந்து ஆய்வு தொட்டி |
| 3 | வார்டு எண்:28 பாரஸ்ட் ரோடு | கழிவுநீர் உந்து ஆய்வு தொட்டி |
| 4 | வார்டு எண்:33 கருவேல்நாயக்கன்பட்டி | கழிவுநீரேற்று நிலையம் |

மேற்கண்டவாறு பாதாள சாக்கடை திட்ட இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிக்கு தேவைப்படும் பணியாளர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் கருதியும், மேலும் நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாத நிலையினை கருத்தில் கொண்டும் தனியார் மூலம் பராமரிப்பு மேற்கொள்ள அரசின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான கீழ்கண்டவாறு உத்தேச செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

| | |
|---|---|
| முதலாம் ஆண்டு | ரூ: 28.48 லட்சம் |
| இரண்டாம் ஆண்டு (5 சதவீத உயர்வு) | ரூ: 29.91 லட்சம் |
| மூன்றாம் ஆண்டு (5 சதவீத உயர்வு) | ரூ: 31.40 லட்சம் |

**அலுவலக குறிப்பு :-**

அ) பாதாள சாக்கடை திட்ட இயக்கம் மற்றும் பராமரிப்பு பணியினை தனியார் மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) தனியார் மூலம் பராமரிப்பு மேற்கொள்ள அரசு அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) பாதாள சாக்கடைத் திட்ட பராமரிப்பிற்கான செலவினத்தை பாதாள சாக்கடை திட்ட மாதாந்திர சேவைக் கட்டணத்தில் ஈடுசெய்திடவும், மேலும் கூடுதல் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5754/2001/இ1)

**தீர்மான எண். 401 அ, ஆ மற்றும் இ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 04:

தேனி – அல்லிநகரம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொது சுகாதார பிரிவு 1 முதல் 5 வரை உள்ள பகுதிகளில் தினசரி சேகரமாகும் குப்பைகளை அந்தந்த பிரிவின் கீழ் உள்ள பகுதிகளில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என பிரித்து வைப்பற்கு கூடம் (Segregation Shed) அமைக்க வேண்டியது அவசியமானதாகும். எனவே பொது சுகாதார பிரிவு 1 முதல் 5 வரை உள்ள பகுதிகளில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என பிரித்து வைப்பற்கு கூடம் (Segregation Shed) அமைத்திட கீழ்கண்டவாறு தேர்வு செய்யப்பட்ட பணிகள் மற்றும் அதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ:8.00 லட்சம் (ரூபாய்: எட்டு லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ: (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி பொது சுகாதார பிரிவு – 1 பொம்மயகவுண்டன்பட்டியில் அமைந்துள்ள நகராட்சி பயனியர் விடுதியில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என பிரித்து வைப்பற்கு கூடம் (Segregation Shed) அமைத்தல் | 1.60 |
| 2 | தேனி – அல்லிநகரம் நகராட்சி பொது சுகாதார பிரிவு – 2 கக்கன்ஜி காலனியில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என பிரித்து வைப்பற்கு கூடம் (Segregation Shed) அமைத்தல் | 1.60 |

| | | |
|---|---|---|
| 3 | தேனி – அல்லிநகரம் நகராட்சி பொது சுகாதார பிரிவு – 3 உழவர் சந்தையில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என பிரித்து வைப்பற்கு கூடம் (Segregation Shed) அமைத்தல் | 1.60 |
| 4 | தேனி – அல்லிநகரம் நகராட்சி பொது சுகாதார பிரிவு – 4 மேற்குச் சந்தையில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என பிரித்து வைப்பற்கு கூடம் (Segregation Shed) அமைத்தல் | 1.60 |
| 5 | தேனி – அல்லிநகரம் நகராட்சி பொது சுகாதார பிரிவு – 5 பங்களாமேடு நாடார் கூட்ட அரங்கு அருகில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என பிரித்து வைப்பற்கு கூடம் (Segregation Shed) அமைத்தல் | 1.60 |
| | **மொத்தம்** | **8.00** |

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.121/2018/இ1)

**தீர்மான எண். 402 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 05:

இந்நகராட்சியின் பொதுசுகாதார பிரிவு வாகன எண் **T.N.60 L 6411** - க்கு வாகன தகுதி சான்று முடிவடைய உள்ளதால் மேற்படி வாகனத்திற்கு தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்து தருவதற்கு **20.12.2017–ம்** தேதி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் கேள்வி விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ( ரூ ) |
|---|---|---|
| 01 | டி வி சுந்தரம் ஐயங்கார் அன்ட் சன்ஸ் பிரைவேட் லிமிட்டெட், தேனி பெரியகுளம் மெயின் ரோடு, மதுராபுரி – தேனி | 64,000/- |

**அலுவலககுறிப்பு:**

1. மேற்படி பணிக்கு ஒற்றை ஒப்பந்தப்புள்ளி கோரிய டி வி சுந்தரம் ஐயங்கார் அன்ட் சன்ஸ் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனத்தின் தொகையினை பொது சுகாதரா அவசர அவசியம் கருதி ஏற்று பழுது பார்ப்பு பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியினை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்தில் பழுது பணி மேற்கொள்ளுவதற்கு வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3953/2018/எச்1)

**தீர்மான எண். 403 1, 2. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 06:

இந்நகராட்சியின் பொதுசுகாதார பிரிவு வாகன எண் **T.N.60 E 3450** - க்கு வாகன தகுதி சான்று முடிவடைய உள்ளதால் மேற்படி வாகனத்திற்கு தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்து தருவதற்கு **20.12.2017–**ம் தேதி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் கேள்வி விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ( ரூ ) |
|---|---|---|
| 01 | டி வி சுந்தரம் ஐயங்கார் அன்ட் சன்ஸ் பிரைவேட் லிமிட்டெட், தேனி பெரியகுளம் மெயின் ரோடு, மதுராபுரி – தேனி | 141000 |

**அலுவலககுறிப்பு**

1. மேற்படி பணிக்கு ஒற்றை ஒப்பந்தப்புள்ளி கோரிய டி வி சுந்தரம் ஐயங்கார் அன்ட் சன்ஸ் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனத்தின் தொகையினை பொது சுகாதரா அவசர அவசியம் கருதி ஏற்று பழுது பார்ப்பு பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியினை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்தில் பழுது பணி மேற்கொள்ளுவதற்கு வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3953/2017/எச்1)

**தீர்மான எண். 404 1, 2. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 07:

தேனி – அல்லிநகரம் நகராட்சி 2017-18-ம் ஆண்டு மூலதண மானியத்தின் கீழ் துப்புரவு பணியாளர் குடியிருப்பு அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தமிழ் மற்றும் ஆங்கில நாளிழல்களில் மாநில அளவில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | Accord advertising agencies, சென்னை (The New Indian Express மற்றும் தினமலர்) | தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை. வெளியீட்டு ஆணை எண்: 5301/ ஒப்ந்தப்புள்ளி / விளம்பரம் / 2017 நாள்: 30-12-2017. | ரூ: 1,10,729/- |
| | | **மொத்தம்** | **ரூ: 1,10,729/-** |

மேற்கண்ட தொகை ரூ:1,10,729/- (ரூபாய்: ஒரு லட்சத்து பத்தாயிரத்து எழுநூற்று இருபத்து ஒன்பது மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.163/2018/எச்1)

**தீர்மான எண். 405 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் 08</u>:**

தேனி-அல்லிநகரம் நகராட்சி எல்கைகுட்பட்ட பகுதிகளில் உள்ள தெரு மின் விளக்குகளை தற்போது துறையின் மூலம் பராமரிப்பு பணியினை மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. மேற்படி தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகளுக்கு தேவையான மின் சாதன பொருட்கள் வருங்கால தேவைக்கு வாங்கப்பட வேண்டிய அவசியம் இருப்பதால் மேற்கண்ட மின் சாதன பொருட்களை அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனங்களில் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,50,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் செலவிட அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 406 1, 2. அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் 09</u>:**

இந்நகராட்சியின் பொதுசுகாதார பிரிவில் கொசு ஒழிப்பு பணிக்கு 75 DBC பணியாளர்களின் ஒப்பந்த காலம் அக்டோபர் 2017 உடன் முடிவடைய உள்ளது. தற்போது நகராட்சியி பகுதியில் டெங்கு காய்ச்சல் தாக்கம் அதிகமாகவுள்ளதால் சுகாதார அலுவலரின் குறிப்பின் படி தற்போது பணிபுரிந்து வரும் 75 DBC பணியாளர்களை ஏற்கனவே சப்ளை செய்து வரும் TRUSTUS OUTSOURCING SOLUTIONS PVT LTD – CHENNAI – நிறுவனத்திற்கு மேலும் 3 மாத காலங்களுக்கு ( நவம்பர், டிசம்பர், ஜனவரி ) நீட்டிப்பு செய்வதற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:</u>**

1. ன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியினை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி DBC பணியாளர்களின் ஒப்பந்த காலம் மேலும் 3 மாத காலங்களுக்கு நீட்டிப்பு செய்யப்பட்ட விபரத்தினை மேற்படி நிறுவனத்திற்கு தெரிவித்து வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.836/2017/எச்1)

**<u>தீர்மான எண். 407 1, 2. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 10</u>:

தேனி-அல்லிநகரம் நகராட்சி பழனி செட்டிபட்டி தலைமை நீரேற்றத்தில் உள்ள மோட்டார்கள், வால்வுகள் மற்றும் கேட்பில் வயர்களில் ஏற்படும் பகுதினை சீர் செய்ய ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டில் மன்ற அனுமதி பெற்று மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தது. மேற்கண்ட காலங்களில் மழைகாலம் ஆதலால் மின்சார ஏற்ற இறக்க காரணமாக மோட்டார்கள் காயில் மற்றும் கேபில்கள் அடிக்கடி பழுதாகி சீர் செய்யப்பட்டது. எனவே மேற்படி பணியானது மதிப்பீட்டை விட கூடுதலாக ரூ.7.60 லட்சம் (ஏழு லட்சத்தி அறுபது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு**</u> :

1. கூடுதல் செலவினம் ரூ.7.60 லட்சம் மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் விநியோகம் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்ற பணி மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.

<u>**தீர்மான எண். 408 1, 2 மற்றும் 3. அனுமதிக்கப்பட்டது.**</u>

## <u>பொருள் 11</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சி 22.23 சதுர கி.மீ பரப்பளவில் 33 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட தலைநகராமாகவும் உள்ளது. இந்நகராட்சியில் மொத்தம் உள்ள 33 வார்டுகளில் சுகாதாரப்பணி மேற்கொள்ளுவதற்கு போதுமான எண்ணிக்கையில் துப்புரவு பணியாளர்கள் 2011 – 12-ம் நிதியாணடில் குறைவாக இருந்ததால் நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் கடித எண். 25779 / P3 / 2012, நாள். 30.07.2012–ன்படி 55 துப்புரவு பணியாளர்களை தனியார் மூலம் ஒப்பந்த முறையில் பெற்று சுகாதாரப்பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி ஏற்கனவே உள்ள நிரந்தர துப்புரவு பணியாளர்களுடன், 55 தனியார் துப்புரவு பணியாளர் கொண்டு இதுநாள் வரை இந்நகர் பகுதியில் சுகாதாரப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இந்நகரின் புறவழிச்சாலையில் புதிய பேருந்து நிலையம் நவீன முறையில் கட்டப்பட்டு A கிரேடு தகுதியுடன் 30.12.2013-ம் தேதி முதல் மிகவும் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. தற்போது ஏற்கனவே பற்றாக்குறையாக உள்ள நிரந்தர துப்புரவு பணியாளர்களுடன், 55 தனியார் துப்புரவு பணியாளர்களுடன் சேர்த்து நகர்பகுதி, புதிய பேருந்து நிலையம் மற்றும் பழைய பேருந்து முனையம் ஆகிய பகுதியில் சுகாதார பணி மேற்கொள்ள மிகவும் சிரமமாக உள்ளது.

**<u>இந்நகராட்சியில் 2017 – 18 -ம் ஆண்டில் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை விபரம் :-</u>**

| வ. எண் | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அரசாணை எண். 101 நாள், 30.04.1997–ன்படி 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பபின் படி தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள் எண்ணிக்கை | 335 நபர்கள் |
| 2 | இந்நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | 215 நபர்கள் |
| 3 | தற்போது உள்ள மொத்த துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | 113 நபர்கள் |
| 4 | அனுமதிக்கப்பட்ட பணியாளர்களை ஒப்பீடுகையில் பற்றாக்குறையாக உள்ள துப்புரவு பணியார்களின் எண்ணிக்கை | 102 நபர்கள் |

மேற்கண்ட விபரங்களின் படி அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கையில் தற்போது உள்ள பணியார்களை எண்ணிக்கையினை ஒப்பீடுகையில் 102 பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ளது. எனவே ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட 55 தனியார் துப்புரவு பணியாளர்கள் முதல் நிலை குப்பை சேகரிக்கும் பணியையும் , தற்போது கூடுதலாக 25 பேர் நகர் பகுதிகளில் குப்பைகள் சேகரித்தல் மற்றும் தரம் பிரித்தல் பணி செய்யவும், மற்றும் 20 நபர்கள் உரக்கிடங்கில் Biominiting Process–க்கான தொழிற் கூடத்தில் பணிபுரியவதற்கும் மொத்தம் ஏற்கனவே உள்ள 55 தனியார் துப்புரவு பணியாளர்களுடன் கூடுதலாக 45 தனியார் துப்புரவு பணியாளர்கள் சேர்த்து மொத்தம் = 100 தனியார் துப்புரவு பணியாளர்களை கொண்டு மேற்படி பணியினை தனியார்மயம் மூலம் பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி இப்பணியாளர்களுக்கான தொகையை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி விலை நிர்ணயத்தின் அடிப்படையில் வழங்குவதற்கும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி பெற்று வேண்டப்படுகிறது.

மேலும், மேற்படி இந்நகராட்சியில் 100% பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ளுவதற்கு தற்போது பற்றாக்குறையாக உள்ள சுமார் 100 துப்புரவு பணியாளர்களை தனியார் மூலம் ஒப்பந்த விதிகளின்படி, மாவட்ட ஆட்சியர் தினக்கூலி விலை விகிதத்தின் அடிப்படையில் பணிபுரிவதற்கு அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களுக்கு கருத்துரு தயார் செய்து அனுப்பி அனுமதி பெற்ற பின்னர் இந்நகராட்சியில் 100 தனியார் துப்புரவு பணியாளர்களை கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண். 409 1. அனுமதிக்கப்பட்டது.</u>**

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி.